(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 36.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 நவம்பர் 19 சனிக்கிழமை  மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

கௌரவ **மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

கௌரவ **அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ **அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

கௌரவ **தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ **டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ **நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

கௌரவ **நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

கௌரவ **பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

கௌரவ **விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **(டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ **லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி**

**கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு**

**கௌரவ உதய கம்மன்பில**

**கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி**

**கௌரவ உதயகாந்த குணதிலக்க**

**கௌரவ யதாமிணீ குணவர்தன**

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன**

**கௌரவ நலீன் பண்டார ஜயமஹ**

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ தம்மிக்க பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ நிபுண ரணவக

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 ஆகஸ்ட் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல் 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கு அமைவாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் கடமையாற்றுவதற்கு பின்வரும் உறுப்பினர்களும் தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை அறியத்தருகின்றேன்:—

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ வேலு குமார்”

**II**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 ஆகஸ்ட் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல் 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கு அமைவாக அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் கடமையாற்றுவதற்கு பின்வரும் உறுப்பினர்களும் தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை அறியத்தருகின்றேன்:—

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய"

**III**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 மற்றும் 2022 ஆகஸ்ட் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல் 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கு அமைவாக அரசாங்க நிதி பற்றிய குழுவில் கடமையாற்றுவதற்கு பின்வரும் உறுப்பினர்களும் தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை அறியத்தருகின்றேன்:—

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர"

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) கல்வி அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின்ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதிய 2301/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் சார்பாக கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன் அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2019 ஆம் ஆண்டுக்கான ரணவிரு சேவா அதிகாரசபையின் ஆண்டறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) பாணந்துறை, திப்பெத்த, கஹடகஹவத்த, 2 ஆம் ஒழுங்கை, இல. 142/47 இல் வதியும் திரு. பி.ஏ.கே. கணநாத்தினது 2022.03.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ உதய கம்மன்பில சமர்ப்பித்தார்.

(2) லுணுவில, வடக்கு கிரிமெட்டியான எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.எம். தர்மசிரியினது 2022.10.31 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஹெக்டர் அப்புஹாமி சமர்ப்பித்தார்.

(3) பலபிட்டிய, புகையிரத வீதி, இல.65 இல் வதியும் திரு. பி.யூ.பி. குமார த சில்வாவினது 2022.09.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா சமர்ப்பித்தார்.

(4) வெலிகம, ஹல்லல, தரங்க எனும் முகவரியில் வதியும் திருமதி எஸ்.பி. அநூசா சியாமலீயினது 2022.10.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல்:** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் தொடர்பான நடவடிக்கை முறைக்காக ஏற்பாடு செய்வதற்கும், குத்தகை வாடகைகள், சேவை விதிப்பனவுகள் மற்றும் ஒழித்துக் கட்டப்பட்ட சேதவீடுகளின் நிலுவைகளை அறவிடுவதற்கான ஒழுங்குபடுத்துவதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2022 டிசம்பர் 03 ஆம் திகதி சனிக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் , சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2022 நவம்பர் 23 ஆம் திகதி புதன்கிழமை, 24 ஆம் திகதி வியாழக்கிழமை, 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 26 ஆம் திகதி சனிக்கிழமை, 28 ஆம் திகதி திங்கட்கிழமை, 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 30 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 2022 டிசம்பர் 01 ஆம் திகதி வியாழக்கிழமை, 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 03 ஆம் திகதி சனிக்கிழமை, 05 ஆம் திகதி திங்கட்கிழமை, 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 08 ஆம் திகதி வியாழக்கிழமை ஆகிய நாட்கள் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2023)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாக இருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வு (இல.1):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— 75(2) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2023)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2022 நவம்பர் 23 ஆம் திகதி புதன்கிழமை முதல் 30 ஆம் திகதி புதன்கிழமை வரையும், 2022 டிசம்பர் 01 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையும் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 7.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 7.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. பாராளுமன்ற அமர்வு (இல.2):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2023)" இன் பரிசீலனைக்காக ஒதுக்கப்பட்ட தினமாகிய 2022 டிசம்பர் 08 ஆம் திகதி, வியாழக்கிழமை சபை அமர்வு நேரம், மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 10.21 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**9. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட ஐந்தாவது நாள்):** ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை ஆரம்பிப்பதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது. (2022 நவம்பர் 14 பிரேரணை மீதானது), —

"சட்டமூலம் இப்போது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனும் பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதம் தொடர்ந்தது.

(பி.ப. 12.01 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்குவாராக" என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.21 மணிக்கு கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமை தாங்குவாராக" என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.11 மணிக்கு கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமை தாங்கினார்.)

"கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்குவாராக" என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.34 மணிக்கு கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்கினார்.)

அவ்வேளை நேரம், பி.ப. 5.30 மணியாகிவிடவே, விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. விவாதம் மீண்டும் 2022 நவம்பர் 21 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

**10. ஒத்திவைப்பு (அம்பாறை மாவட்டத்தில் அனுமதிப்பத்திரதாரர்களின் காணிகளை விடுவித்தல்):** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை, நேரம் பி.ப. 6.00 மணியாகிவிடவே, தலைமை தாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2022 நவம்பர் 10 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கிணங்க, 2022 நவம்பர் 21 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.